**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No..114/2018 தேதி- 16.02.2026

(D.W.1) .ரவி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.3 வரையிலான ஆவணங்கள் அடிப்படையில் வழக்கு பட்டிகை சொத்து இந்து அறநிலைய துறைக்கோ மற்ற மதநிறுவனங்களுக்கோ உரிமையுடையது என்று கூறமுடியாது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டிகை சொத்திற்கும் மதநிறுவனத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பொதுமக்கள் கோவிலில் வழிபாடு செய்வதாக கூறவில்லை என்றால் ஆவணங்களில் இல்லை என்றாலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உள்ளதுதான் வழக்கு பட்டிகை சொத்து. நான் பொய்யாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உரியது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தேரகவேலி மடம் என்பது தொடர்நிலைய ஆவணம் என்று எனது முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேன் அது தவறு என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திலிருக்கும் வீடு மடத்தால் கட்டப்பட்டது என்று பி.வா.சா.ஆ. 1 மற்றும் பி.வா.சா.ஆ. 2ல் கூறப்பட்டு உள்ளதா என்றால் கூறப்பட்டுள்ளது. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் தேரகவேலி மடம் எந்த வீடும் வழக்கு பட்டிகை சொத்தில் கட்டவில்லை என்றால் சரியல்ல, தேரகவேலி மடம் கட்டிடம் கட்டியதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இருந்தால் தாக்கல் செய்யலாம். எனது முதல் விசாரணையில் கிருஷ்ணன்போற்றி என்பவர் பட்டிகை சொத்தில் இருக்கும் வீட்டை கட்டவும் இல்லை அங்கு வசிக்கவும் இல்லை என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

கிருஷ்ணன்போற்றியும் சுப்பிரமணியன் போற்றியும் மேற்படி மடத்தின் அங்கத்தினரா என்றால் மடத்தால் நியமிக்கப்பட்ட பூசாரி அதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும். வழக்கு பட்டிகை சொத்தில் எல்லை சுவர் கட்டப்பட்டுள்ளதாக நான் கூறியுள்ளேன் எந்தெந்த பக்கத்தில் சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் மேற்கு பக்கமும் கிழக்கு பக்கமும் கட்டப்பட்டுள்ளது.

100 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. நான் பொய் சாட்சி அளிக்கிறேன். மேற்படி சுவர் கிருஷ்ணன்போற்றி அவரது மகன் மற்றும் வாதியால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

கன்னியாகுமரி மாவட்டம் கேரளாவில் இருந்து 1956 ல் பிரிந்து தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பே தேரகவேலி மடத்தின் சொத்து பல நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டு அவர்களது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அனுபவித்து வருகிறார்கள் ஆனால் அவர்களுக்கு உரிமை இல்லை. உரிமையில்லை என்று நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 மற்றும் பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் 1949 ஆம் ஆண்டிற்கு முன்பே தேரகவேலி மடத்திற்குரிய சொத்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் அளக்க வரும்போது நானும் 2 ஆம் பிரதிவாதியும் இருந்தோம் என்றால் நாங்கள் அங்கு இல்லை. பட்டிகை சொத்தின் அருகில் நின்றோமா என்றால் பட்டிகை சொத்தின் வெளியில் நின்றோம். ஆணையரிடம் பட்டிகை சொத்திற்கு வரும் வாகனங்கள் கொண்டு செல்லும் பாதை, கோவில்கள், கோவிலை பொதுமக்கள் பயன்படுத்தி வருவதாக எந்த தடையங்களும் இருக்கிறதா என்று காட்ட மெமோ ஏதாவது ஆணையரிடம் கொடுத்தோமா என்றால் ஆணையர் சரியாக எழுதுவார் என்ற நம்பிக்கையில் மெமோ எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு பட்டிகை சொத்தில் கோவில் எதுவும் இல்லை என்றால் வழக்கு பட்டிகை சொத்தில்தான் கோவில் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தில்எந்த கோவிலும் இல்லை அப்படி இருந்திருந்தால் ஆணையர் அதை திட்டப்படுத்தி காட்டியிருப்பார் என்றால் கோவில் உள்ளது ஆணையர் எதனால் அதை காட்டவில்லை என்பது தெரியாது.

பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ- 6 ஆவணங்களில் வழக்கு பட்டிகை சொத்தில் கோவில் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் காட்டப்பட்டுள்ளது. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சர்வே நம்பரில் கோவில் இருப்பதாகவும் அதில் பொதுமக்கள் திருவிழா நடத்துவதாகவும், அன்னதானம் நடத்துவதாகவும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யமுடியாது என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை ஆனால் தாக்கல் செய்யமுடியும். பி.வா.சா.ஆ. 3 ல் கரார் பத்திரம் என குறிப்பிடப்பட்டுள்ளது அப்படி என்றால் அக்கிரீமெண்ட்

என்றால் சரிதான்.

குடியான்மார் என்றால் பாட்டக்காரன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 3 ஆவணம் தேரகவேலி மடத்தால் சுப்பிரமணிய போற்றிக்கு எழுதிக்கொடுத்த அக்கிரீமெண்ட் என்றால் சரிதான். அதில் சுப்பிரமணிய போற்றியை தேரகவேலி மடத்திற்கு உட்பட்ட சொத்துக்களில் குத்தகைதாரர்களிடமிருந்து வருட குத்தகையை பிரிக்க மேலாளராக நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். தற்போது வாதிதான் வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிதான் வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து அதிலிருக்கும் வீட்டை உபயோகப்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வாதி நல்ல உடல்நிலையில் இருப்பதாக நான் கூறியிருப்பது தவறு என்றால் 6, 7 மாதத்திற்கு முன்புவரை நன்றாக இருந்தார் அதற்கு பின்பு தெரியாது.

வாதி வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து வருவதை நானும் 2 ஆம் பிரதிவாதியும் 4 ஆம் பிரதிவாதியும் தடை செய்ததால் குலசேகரம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் மட்டும் காம்போண்ட் சுவர் இல்லை என்றும் பட்டிகை சொத்தினுள் எந்த வழிப்பாதையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆணையர் சரியாக இடத்தை பார்க்கவில்லை. வாதிதான் வழக்கு பட்டிகை சொத்தை அனுபவித்து வருகிறார் எனக்கோ வேறு எவருக்கும் அதில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.